வரியைக் கூட்டுகிறார்கள், இப்போது புதிதாக. நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. காலி மனை வரி, vacant land tax என்று சொல்லி இரண்டு விழுக்காடு. . .

பிற்பகல் 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினரின் உரை நாளை தொடரும்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (30–3–2007) வெள்ளிக்கிழமை காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1–30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

30. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் நாற்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

31. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முப்பத்து நான்காவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

22. 2005–2006 ஆம் ஆண்டிற்கான சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் தணிக்கை அறிக்கை—ஆண்டு கணக்கு. (தமிழ், ஆங்கிலம்)

23. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

24. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)